Article

**தமிழர் கூறிய பொருளாதார மேம்பாடு**

**Journal of Development Economics and Management Research Studies (JDMS)**
**02(02), 32-38, October-December 2019**
**@Center for Development Economic Studies (CDES)**
**Reprints and permissions**
**http://www.cdes.org.in/**
**http://www.cdes.org.in/current-issue/**

முனைவர் இரா. கவிதா, தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர்
சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர்

## தமிழர் கூறிய பொருளாதார மேம்பாடு

### முன்னுரை:

ஒரு மனிதன் தனக்காக தனது குடும்பத்திற்காக மட்டுமே பொருள் ஈட்டுகிறான் என்றால் அவனை மனித குலத்தில் ஒருவனாக வைத்து சங்க காலத்து ஆன்றோர் சான்றோர் பெருமக்கள் மதிக்க மாட்டார்கள். தனக்காக மட்டுமல்லாமல் தான் சார்ந்திருக்கும் சமுதாயத்திற்காகவும் இனத்திற்காகவும் எவர் ஒருவர் உழைக்கின்றாரோ அவரையே மனிதன் என்றும் தலைவன் என்றும் போற்றுகிறார்கள். சங்ககாலத்தில் நீர் வளம், நில வளம், கனிம வளம் மட்டுமல்லாமல் மனித வளமும் நிறைந்து காணப்பட்டது. மனித வளத்தினால் தான் மனிதர்கள் ஒன்றாய் இணைந்து சுமுகமாய், சமூகமாய், மகிழ்வாய், நிறைவாய் வாழ்ந்திருக்கிறார்கள். இன்றைய சூழலில் மனித வளம் குறைந்து கொண்டே வருவதால் இயற்கை வளமும் குறைந்து கொண்டே வருகிறது. மனிதர்களுக்குள் சர்ச்சை, சண்டை, சச்சரவு போன்றன ஏற்பட்டுக்கொண்டேயிருக்கின்றன. அனைத்திற்கும் மிக முக்கிய காரணம், 'பொருளாதாரம்'.

### பொருளாதாரம்:

மனிதன் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளிலேயே மனிதனை மனிதனாய் வாழ விடாமல் செய்வது 'பணம்'. இது பணத்தின் மீதுள்ள குற்றச்சாட்டு அல்ல. மக்கள் மனத்தின் மீது விழுந்த பேரிடி இப்பணம். 'பணம்' ஈட்டுவதற்கு மனிதர்களுக்கு இரண்டு நிலைகள் உள்ளன. ஒன்று சுதந்திர நிலை, மற்றொன்று அடிமை நிலை.

சுதந்திர நிலை என்பது, பொருளை ஈட்டுவதற்கு தன் மனதிற்கேற்றார் போல் செயல்புரிந்து அதில் வரும் இலாப நஷ்டங்களுக்குப் பொறுப்பேற்று, இன்பதுன்பங்களை அனுபவித்து, தான் மட்டும் முன்னேறாமல் மற்றவரையும் முன்னேற உழைப்பது, நாட்டின் பொருளாதாரத்தையும் முன்னேற்றுவது என்பதாகும்.

அடிமை நிலை என்பது, சுதந்திர நிலை போல் இல்லாமல், பிறருக்காக கடினப்பட்டு உழைப்பது, நேரத்திற்கு உழைப்பது, பிறருக்கு கட்டுப்பட்டே தனது இன்ப துன்பங்களை அனுபவிக்கின்ற நிலை, நஷ்டங்களுக்கு பொறுப்பேற்க வேண்டிய அவசியமில்லாதது, தன் குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே காலம் முழுவதும் உழைப்பது, ஆக தனக்காக மட்டுமே உழைக்கின்றநிலையாகும்.

இவ்விரண்டு நிலைகளில் பெரும்பாலும் மக்களால் பெரிதும் தேர்வு செய்யப்படுவது இரண்டாம் நிலையான 'அடிமை நிலை' என்பதே. இதற்கு பெரும்பாலும் படித்திருக்க வேண்டும், உடல் உழைப்பு வேண்டும், நேரத்திற்கு கட்டுப்பட்டு பணியாற்ற வேண்டும். இவை இருந்தால் போதுமானது, வேறெதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். 'தன் சம்பாத்தியம், தன் குடும்பம், தன் வாழ்க்கை' என்ற நிலையில் சிலர் மகிழ்வாகவும் பலர் வேறு வழியின்றி தனது கனவுகளை, ஆசைகளை, எண்ணங்களை எல்லாம் சமாதானப்படுத்திக் கொண்டு வாழ்கின்றனர்.

பொருளாதாரத்தை ஈட்டிக்கொள்வதற்கு பல வழிமுறைகள் காணப்படினும், காலவெள்ளத்தில் வரும் புதிய மாறுதல்களை எல்லாம் தனதாக்கிக் கொண்டு வாழப் பழக வேண்டும். அவ்வகையில் புதியதொரு வர்த்தகமாக இருந்தாலும் பொன்விழா கொண்டாடிய பல்நிலை வர்த்தகம் என்கின்ற தொழிலை மையமாகக் கொண்டும் புரட்சித் தமிழரான பாரதிதாசன் பாடிய 'கூடித் தொழில் செய்க' எனும் பாடலை மையமாகக் கொண்டும் "தமிழர் கூறிய பொருளாதார மேம்பாடு" எனும் தலைப்பில் இவ்வாய்வுக் கட்டுரை அமையப்பட்டுள்ளது.

## தமிழர் கூறிய பொருளாதார மேம்பாடு:

ஔவையார், திருவள்ளுவர் காலந்தொட்டு பாரதியார் காலம் வரையிலும் பொருளாதாரக் கருத்துக்களை கூறாத தமிழ்ப் புலவர்களோ தமிழ்க் கவிஞர்களோ இல்லை எனலாம். அவ்வழியில் வந்த புரட்சிக் கவிஞரான பாரதிதாசன் பொதுவுடைமைச் சிந்தனைகளை மக்களிடம் கொண்டு சென்றார். ஒவ்வொருவரும் 'உழைக்க' வேண்டும் என்கின்றார். அந்த உழைப்பு கூடித் தொழில் செய்வதன் மூலம் இருந்தால் உழைப்புக்கேற்ற பயனும் கிடைக்கும்; உழைப்பவருக்கு இவ்வுலகும் வசமாகும் என்று கூறுகிறார்.

பொதுவுடைமைச் சமுதாயத்தை தமிழ் மண்ணில் உருவாக்க மிகவும் விரும்பியவர் பாரதிதாசன். இங்கு வேரூன்றியுள்ள ஏற்றத் தாழ்வுகள், சாதிசமய மூட பழக்க வழக்கங்கள், ஆண் பெண் பாகுபாடுகள் போன்ற நிலைகளில் இருந்து தமிழ்ச் சமுதாயத்தை மீட்டெடுக்க எண்ணினார். தொழிலாளர்கள் என்று வருகின்ற போது பாரதிதாசனுக்கு தமிழ்நாட்டு தொழிலாளர்கள், அயல் நாட்டுத் தொழிலாளர்கள் என்று பாகுபடுத்தி பார்க்கும் எண்ணம் என்றுமே இருந்ததில்லை. அனைவரையும் சமமாகவே கருதி, உலகத் தொழிலாளர்கள் என்றே தம் பாடல்களில் எடுத்தாண்டுள்ளார்.

புதிய உலகம் படைக்க விரும்பிய பாரதிதாசன், பின்வரும் அடிகளில் தீயவழியில் செயல்புரிகின்ற உலகத்தவர்களை அழித்திட வேண்டும் என்கிறார்.

> **"புதிய தோர் உலகம் செய்வோம் - கெட்ட**
> **போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்" (பு.உ.)**

உலகத் தொழிலாளர்களில் பலர் வேலையின்றி துன்பப்படுவதற்கு காரணம் என்ன என்பதை குறித்து ஆராய்ந்துள்ளார். அதன் விளைவே, 'கூடித் தொழில் செய்க' எனும் பாடல் அவரது சிந்தனையில் தோன்றியிருக்கிறது.

தொழிலாளர்கள் எவ்வித பாகுபாடுமின்றி தங்களுக்குள் ஒற்றுமை உணர்வுடன் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். அவ்வாறு செயல்பட்டால் சிறிய தொழில்களை அவர்களாலேயே உருவாக்கிவிட இயலும். இந்தச் சிறு தொழில்கள் அவர்களுக்கு வாழ்வு அளிப்பதுடன் பிற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினையும் வழங்கும். ஆகையால், தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து, கூட்டுத் தொழில் முறையைப் பின்பற்றி வாழ்வில் உயர வேண்டும் என்று பாடியுள்ளார். அவ்விதம் அவர் பாடிய பாடல்களில் ஒன்று தான் 'கூடித் தொழில் செய்க' என்பதாகும்.

**கூடித் தொழில் செய்க:**

> **"கூடித் தொழில் செய்தோர் கொள்ளை இலாபம் பெற்றார்
> வாடிடும் பேதத்தால் வாய்ப்பதுண்டோ தோழர்களே!
> நாடிய ஓர் தொழில் நாட்டார் பலர் சேர்ந்தால்
> கேடில்லை நன்மை கிடைக்குமன்றோ தோழர்களே!**
> ------------------------------------------------
> **வாடித் தொழிலின்றி வறுமையால் சாவதெல்லாம்
> கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் தோழர்களே!
> கூடித் தொழில்செய்யாக் குற்றத்தால் இன்றுவரை
> மூடிய தொழிற்சாலை முக்கோடி! தோழர்களே!
> கூடைமுறம் கட்டுநரும் கூடித்தொழில்செய்மின்
> தேடிவரும் லாபம் சிறப்புவரும் தோழர்களே!"**

தொழிலாளர்களிடையே புரட்சிக்கரமான கருத்துக்களை விதைத்தவர் பாரதிதாசன். வெளிநாடுகளில் இருக்கின்ற தொழிலாளர்களின் நிலையையும் இங்குள்ள தொழிலாளர்களின் நிலையையும் எண்ணிப்பார்க்கிறார். புதுமையானதொரு வர்த்தக முறை வெளிநாடுகளில் நடைபெறுவதை பாரதிதாசன் அறிந்திருக்கக்கூடும். வெளிநாடான அமெரிக்காவில் தோன்றிய, 'பல்நிலை வர்த்தகம்' என்ற புதியதொரு தொழில் முறையை பாரதிதாசன் அறிந்திருக்கலாம். அதன்படியே, 'கூடித் தொழில் செய்க' என்பது போன்ற பாடல்களை இயற்றியுள்ள முடிந்திருக்கிறது.

**பாரதிதாசன் கூறும் பொருளாதார மேம்பாடு:**

பாரதிதாசன் பாடிய படி கூடித் தொழில் செய்தால் செய்பவரது பொருளாதார மேம்பாட்டுடன் நாட்டின் பொருளாதார மேம்பாடும் எவ்வாறு உயரும் என்பதனை 'கூடித் தொழில் செய்க' எனும் பாடலோடு பல்நிலை வர்த்தகத்தை ஒப்பீட்டு ஆராய்வோம்.

**கூடித் தொழில் செய்தோர் கொள்ளை இலாபம் பெற்றார்:**

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற பழமொழிக்கேற்ப பல்நிலை வர்த்தகத் துறையின் செயல்பாடு அமைந்துள்ளது. 'இதில் 'கூடித் தொழில் செய்தால் கோடி நன்மை' எனலாம். பாரதிதாசன் கூறியது போன்று, 'கூடித் தொழில் செய்தோர் கொள்ளை இலாபம் பெற்றார்' என்று கூறக்கூடிய வர்த்தக முறை தான் பல்நிலை வர்த்தகம் துறை.

பல்நிலை வர்த்தகத்தின் தாரக மந்திரமே 'கூடித் தொழில் செய்க' என்பது தான். இதில், ஒருவர் தனித்து இயங்கி வெற்றி பெற வேண்டும் என்று இல்லாமல், குழுவாக இணைந்து செயல்பட்டு குழுவினரையும் வெற்றி பெறச் செய்து, தானும் வெற்றி பெறும் ஒரு உன்னத செயல் முறை தான் அடித்தளமாக இருந்து வருகிறது. சுற்றத்தார், தெரிந்த உறவினர், நண்பர், அக்கம் பக்கத்தினர், உடன் பணிபுரிபவர், பழக்கமாகுபவர் என அனைத்து உறவு வட்டாரங்களையும் தம்முடன் இணைத்துக் கொண்டு இங்கு செயலாற்றலாம்.

**நாடிய ஓர் தொழில் நாட்டார் பலர் சேர்ந்தால் கேடில்லை:**

மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் விருப்பமான ஒரு செயல் 'ஒன்றைப் பற்றி மற்றவரிடம் பேசுவது' தான். நாம் அனுபவித்த ஒரு பொருளையோ, திரைப்படத்தையோ, செயல்பாட்டையோ பிறரிடம் கூறுவதன் மூலம் இனம் புரியாத மகிழ்ச்சி உண்டாகிறது. இவ்வாறு கூறுவதனால் ஆகக் கூடிய காரியம் என்று எதுவுமில்லை. அதாவது, வருமானம் என்று பெரியதாக ஏதுமில்லை. ஆயினும், நம்மால் நாம் அனுபவித்ததை பிறரிடம் பகிர்ந்து கொள்ளாமல் இருக்க முடியாது. அனைவராலும் விரும்பக்கூடிய இச்செயல்பாட்டை, அஃதாவது நாம் அனுபவித்த விஷயத்தை மற்றவரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டிய நிலை தான் பல்நிலை வர்த்தகத்தின் உயிர்நாடியாகும்.

**சிறுமுதலால் லாபம் சிறிதாகும்; ஆயிரம்பேர் உறுமுதலால் லாபம் உயரும்:**

இராபர்ட் கியோஸாகி கூறியது படி, தொழிலதிபர்கள் ஒரு முறையை (SYSTEM) உருவாக்கி, பல்லோரிடமிருந்து உழைப்பையும் திறமையும் நேரத்தின்படி பெற்று அதன்வழி பல்லாயிரக்கணக்கான இலட்சங்களை சம்பாதிக்கின்றனர். இதையே தான், பாரதிதாசனும் ஆயிரம் பேர் ஒன்றிணைந்து செயல்பட்டால் இலாபம் உயரும் என்று கூறுகிறார். பல்நிலை வர்த்தகத்திலும் தனித்து செயல்படும் போது வருமானம் குறைவாக வரும். அதேசமயம், பலபேர் ஒன்றாக இணைந்து செயல்புரியும் போது இலாபம் அதிகமாக இருக்கும்.

**அறுபதுபேர் ஆக்கும் அதனை ஒருவன் பெறுவதுதான் சாத்தியமா?:**

பல்நிலை வர்த்தகம் என்ற ஒரு புதிய வர்த்தக முறை இல்லையென்றால் ஒரு நிறுவனத்தில் தயாரிக்கப்படும் பொருட்கள் மொத்த வியாபாரிகள், தரகர்கள், இடைத்தரகர்கள், சில்லறை வியாபாரிகள் என பல கைகள் மாறி வாகனங்களின் மூலமாக இறுதி பயனீட்டாளரான மக்களை வந்தடைவதால் விலையும் கூடுதலாகப் பெற்று வரும். அதுமட்டுமின்றி, பொருட்களை விளம்பரப்படுத்துதல் மூலம் தான் அதிக பணம் செலவழிக்கப்படுகிறது. மக்களே விளம்பரப்படுத்துவதன் மூலம் அப்பணம் மக்களிடமே சென்று சேர்கிறது. ஆகையால், ஒரு சிலர் மட்டும் சம்பாதிக்கின்ற பணம் இங்கே பரவலாக்கப்படுகிறது. பலர் சம்பாதிக்கின்ற (அறுபது பேர் ஆக்கும்) இத்தொழிலில் சிலர் மட்டும் சம்பாதிப்பது (ஒருவன் பெறுவது சாத்தியமா?) சரியா என்று பாரதிதாசன் கேட்பது போன்றுள்ளது. மேலும், அறுபது பேர்கள் இணைந்து செயல்படுவதனால் ஒருவன் மட்டுமே இலாபம் அடைதலும் கூடாது என்ற கருத்தும் இங்கே பதிவு செய்யப்படுகிறது.

**பற்பலபேர் சேர்க்கை பலம்சேர்க்கும்; செய்தொழிலில் முற்போக்கும் உண்டாகும்:**

ஒரு குழுவாக இணைந்து செயல்படும் போது அச்செயலுக்கு பலம் கூடுதலாகும் (பற்பலபேர் சேர்க்கை பலம்சேர்க்கும்); அதனால் வருமானமும் அதிகரிக்கும். மேலும் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு வருமானத்தைப் பெறுவதால்; ஏழை

பணக்காரன், ஆண் பெண் பாகுபாடு, சாதி சமய வேறுபாடு, படித்தவன் படிக்காதவன் ஏற்ற இறக்க நிலையெல்லாம் மறைந்து அனைவரும் சமம் என்ற முற்போக்கு எண்ணமும் உண்டாகும் (செய்தொழிலில் முற்போக்கும் உண்டாகும்).

**ஒற்றைக் கைதட்டினால் ஓசை பெருகிடுமோ?:**

தனி ஒருவனாக இருந்து பல்நிலை வர்த்தகத்தை செய்து பெரிய அளவில் வருமானத்தைப் பெற இயலாது. நுகர்வோராக மட்டுமே இருக்க முடியும். வருமானத்தைப் பெருக்க வேண்டுமானால், ஒருகை தட்டினால் ஓசை வராது; பல கைகள் இணைந்து தான் தட்டுதல் வேண்டும்.

**ஒருவன் அறிதொழிலை ஊரார் தொழிலாக்கிப் பெரும் பேறடைவதுதான் வெற்றி:**

எந்தவொரு தொழிலில் ஈடுபடுவோரும் தனக்கான தொழில் இரகசியங்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள மாட்டார்கள். தனக்கு நெருங்கிய உறவினரிடம் நண்பர்களிடம் கூட தொழில் இரகசியத்தைப் பற்றி கூறாமல் தொழில் தந்திரம் என்று கூறிக் கொள்வார்கள். பல்நிலை வர்த்தகத்தில் தனக்குத் தெரிந்த அனைத்து தகவல்களையும் பயிற்சிகளையும் தம் குழுவில் உள்ள அனைவரிடமும் பகிர்ந்து கொள்வதன் (ஒருவன் அறிதொழிலை ஊரார் தொழிலாக்கி) வழியே தான் இங்கு வெற்றி கிடைக்கும் (பெரும் பேறடைவதுதான் வெற்றி). இதனால், தீய எண்ணம் ஒழிந்து நல்லதொரு மனப்பாங்கும் உணடாகிறது.

**இருவர் ஒருதொழிலில் இரண்டுநாள் ஒத்திருந்த சரிதம் அரிது நம் தாய்நாட்டில்:**

பொதுவாக இருவர் ஒன்று சேர்ந்து ஒரு தொழில் செய்வது என்பது மிகப்பெரியதொரு விஷயம். ஏனெனில், இருவரின் மனம் ஒன்று பட்டால் தான், வியாபரத்தில் அவர்கள் எடுக்கும் முடிவுகள், பின்பற்றும் திட்டங்கள் அனைத்தும் நன்றாக இருக்கும். இல்லையெனில், ஆளுக்கொரு முடிவினை எடுத்தால் விரைவாகவே தொழிலானது நசிந்து விடும். மனித வளம் மிகச் சிறப்பாக இருக்கின்ற போது தான் இருவர் ஒரு தொழிலில் இணைந்து செயலாற்றி வெற்றி பெற முடியும். இல்லையெனில் மிகவும் கடினம்.

**நாடெங்கும் வாழ்குவதிற் கேடொன்று மில்லை:**

'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் பாடல் வரிகளுக்கிணங்க, 'நாடெங்கும் வாழ்குவதிற் கேடொன்று மில்லை' என்று பாரதிதாசன் கூறியிருக்கிறார். ஒரு பொருளை விநியோகிக்கும் உரிமையைப் பெற்றால் அந்த உரிமை குறிப்பிட்ட இடத்திற்குள் மட்டுமே செல்லுபடியாகும். ஆனால், பல்நிலை வர்த்தகத்தில் அவ்வாறில்லை. பல்நிலை வர்த்தக நிறுவனத்தின் கிளை எந்தெந்த நாடுகளில் எல்லாம் இருக்கிறதோ அந்தந்த நாடுகளில் எல்லாம் இங்கிருந்து கொண்டே செய்யலாம்.

**பீடுற்றார் மேற்கில் பிறநாட்டார்:**

இன்றைய அமெரிக்க அதிபர் டொனல்டு டிரம்ப் அவர்களின் அடிப்படைத் தொழில் பல்நிலை வர்த்தகமே. இத்துறையில் ஈடுபட்டதன் மூலமாகவே தன்னை உலக கோடீஸ்வரர்கள் வரிசையில் இணைத்துக் கொண்டார். இன்று அமெரிக்கா, ஜப்பான், கனடா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் வளர்ந்து சிறந்ததொரு இடத்தைப் பிடித்திருப்பதற்கு பல்நிலை வர்த்தகமும் ஒரு முக்கியக் காரணமாகும். ஒவ்வொரு தனி மனிதர்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சியாகும். அவ்வகையில், அமெரிக்காவில் பல்நிலை வர்த்தக முறை தோற்றுவிக்கப்பட்டதன் முதல் இன்று வரை அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கியப் பங்கு பல்நிலை வர்த்தகத் துறைக்கும் உண்டு என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இன்று, பில்கேட்ஸ் அவர்கள், 'நான் முதலில் இருந்து தொழில் தொடங்குவதற்கான வாய்ப்பு கிடைத்தால் நிச்சயமாக நான் பல்நிலை வர்த்தகத் துறையைத் தான் தேர்ந்தெடுப்பேன்' என்று கூறுகிறார். அந்தளவிற்கு பற்பல கோடீஸ்வரர்களை உருவாக்கியப் பெருமை பல்நிலை வர்த்தகத்திற்கு உண்டு.

**ஐந்துருபாய்ச் சரக்கை ஐந்துபணத்தால் முடித்தல்:**

அனைவரும் ஒன்றிணைந்து கருத்தொருமித்தால் இடைத்தரகர்கள், விளம்பரதாரர்கள், ஊடகங்கள் ஏதுமின்றி ஐந்து ரூபாய்க்கு தயார் ஆகும் பொருளை ஐந்து ரூபாய்க்கே நிறுவனத்திடமிருந்து நேரடியாக பெறக்கூடிய வழிமுறையை பல்நிலை வர்த்தகத் துறையால் சாதிக்கலாம்.

**சந்தைக் கடையோ நம் தாய்நாடு?:**

இந்தியா நாடு விடுதலை அடைவதற்கு முன்னதாக வெளிநாட்டு நிறுவனங்கள் பல இங்கே காலூன்றின. நம்நாட்டு மக்களின் உழைப்பையும் நேரத்தையும் திறமையும் எடுத்துக்கொண்டு சொற்ப ஊதியத்தை வழங்கிவந்தது. இதனால், உள்நாட்டு நிறுவனங்கள் பாதிப்பிற்குள்ளாகி வெளிநாட்டு நிறுவனங்கள் மட்டுமே வளர்ச்சி பெற்றன. தொழிலாளர்கள் எல்லா வகையானும் அடிமைப்பட்டுக் கொண்டிருந்த நேரம் அது. அந்நிலையை காணசகிக்காத பாரதிதாசன் அடிமைப்பட்டுக்கிடந்த நெஞ்சங்களையெல்லாம் தமது பாடல்களால் தட்டியெழுப்பி உரிமை கேட்கத் தூண்டினார். சந்தைக் கடையோ நாம் தாய்நாடு? என்று ஒவ்வொருவரிடமும் தேசப்பற்றை கொண்டு சேர்த்தார். இன்றும் பல கார்ப்பரேட் நிறுவனங்களால் இந்திய நாட்டை சந்தைக்கடையாக தான் எண்ணுகின்றன.

**சிந்தைவைத்தால் நம் தொழிலும் சிறப்படையும்:**

மனிதவள மேம்பாட்டை அதிகரிக்கும் பெருந்தொழிலைப் புரிந்து வந்தாலும் வாழ்வின் அடிப்படையில் உரிமையற்ற அடிமைகளாய் உழல்வதைக் கண்ட பாரதிதாசன்,

"எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமை
எல்லாம் எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே"

என்று பொதுவுடைமைக் கொள்கைகளை தொழிலாளர்களிடம் விதைத்தார். ஆக, நாம் மனது வைத்து ஒன்றுபட்டு உழைத்தால் நமது தொழிலும் சிறப்படையும் என்று எடுத்துரைக்கிறார்.

**வாடித் தொழிலின்றி வறுமையால் சாதல்:**

தொழிலாளர்கள் உழைத்தும் வறுமையில் இருப்பதற்கு காரணம் அவர்கள் ஒன்று கூடி இணைந்து செயல்படாதது தான் காரணம் என்று எடுத்துரைக்கிறார். ஒருவருக்கு திறமை குறைவாக இருக்கிறது அல்லது படிப்பறிவு இல்லாதவர் என்று வைத்துக் கொண்டால் அவர் மற்றொருவருடன் கூடித் தொழில் செய்தால் அவருக்கு வறுமை நிலை உண்டாகாது.

**கூடித்தொழில்செய்மின் தேடிவரும் லாபம்:**

கூடித்தொழில் செய்தால் அதிகளவில் வருமானத்தைப் பெற முடியும் என்பது பல்நிலை வர்த்தகத்தில் நிருபணம் ஆகியுள்ளது. பலரும் ஒன்றிணைந்து செயல்பட்டு பல இலட்சங்கள், கோடிகள் சம்பாதிக்கின்றனர். அனைவருக்கும் ஏற்ற தொழிலாக இருப்பதால் முறை வழி வருமானம் கிடைக்கப்பெறுவதால் அதிகளவில் இலாபம் அடைகின்றனர். மேலும், சில வருடங்கள் மட்டும் உழைத்து விட்டு பல வருடங்கள் வாழ்வை இரசிப்பதற்க்கு நேரம் கிடைக்கின்ற தொழிலாக பல்நிலை வர்த்தகம் விளங்குகிறது. பல்நிலை வர்த்தகத்தில் கூடித் தொழில் செய்தால் இலாபம் மட்டுமல்ல, பெயர், புகழ், அங்கீகாரம், வெளிநாட்டுச் சுற்றுலா, உல்லாச வாகனம், பெரியதொரு மாளிகை என பற்பல விஷயங்களும் கிடைக்கும்.

**முடிவுரை:**

பாரதிதாசனின், 'கூடித் தொழில் செய்க' எனும் பாடல்வரிகள் பல்நிலை வர்த்தகத்தின் முறைக்கு எவ்வாறு பொருந்தி வருகிறது என்பதை நன்கு அறியமுடிகிறது. மேலும், பாரதிதாசன் கூறிய வகையில் பல்நிலை வர்த்தகத்தில் ஈடுபடுவோர் தனது பொருளாதார மேம்பாட்டை மட்டுமல்ல தன்னைச் சார்ந்திருப்பவர்களது மேம்பாட்டையும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்துவார் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. ஆக, இவ்வர்த்தகம் எத்தகையதொரு பொருளாதார மேம்பாட்டை நல்க முடியும் என்பதையும் உணரமுடிகிறது.

**********